00 174

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்**
**உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 02**
**MMC2404 -தொழில் உரிமையாளர்களுக்கான சந்தைப்படுத்தல்**
**இறுதி பரீட்சை – 2023/2024**
**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

| | |
|---|---|
| **திகதி: ~~19.05.2024~~** 11 . 08 . 2024 | **நேரம்: 09.30 மு.ப – 11.30 மு.ப** |

**ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்குப் பதிலளிக்க.**

Q1.

I. ஒரு வாடிக்கையாளரின் பார்வையில் உண்மை பெறுமதி (Actual Value) மற்றும் உணரப்பட்ட பெறுமதி (Perceived Value) என்பவற்றிற்க்கிடையிலான வித்தியாசத்தை ஒரு உதாரணம் மூலம் விளக்குக? (10 புள்ளிகள்)

II. ஒரு வாடிக்கையாளரின் மதிப்பை ஒரு தொழில் உரிமையாளர் அறிந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் என்ன என்பதை விபரிக்குக? (15 புள்ளிகள்)

Q2.

I. ஒரு தொழில் உரிமையாளரின் சிற்றின சூழல் (Micro Environment) காரணிகளை பட்டியலிடுக? (05 புள்ளிகள்)

II. அச்சிடும் தொழிலை மேற்கொள்ளும் ஒரு தொழில் உரிமையாளரின் வியாபாரத்தின் மீது மேலே நீங்கள் பட்டியலிட்ட சிற்றின சூழல் (Micro Environment) காரணிகள் எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றன என்பதை விளக்குக. (20 புள்ளிகள்)

Q3.

I. தாவரங்களை விற்பனை செய்யும் ஒரு சிறு வணிக நிறுவனத்தில் பேணப்படுகின்ற உள்ளக பதிவேடுகள் (Internal Records) யாவை? (10 புள்ளிகள்)

II. மேலே தங்களால் குறிப்பிடப்பட்ட உள்ளக பதிவேடுகள் (Internal Records) ஒரு தொழில் உரிமையாளரின் வணிகத்தில் தீர்மானங்களை எடுப்பதில் எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்குக? (15 புள்ளிகள்)

Q4.

நீங்கள் ஒரு பழக்கடையை வைத்திருக்கும் ஒரு தொழில் உரிமையாளர் என கொள்க, நீங்கள் எவ்வாறு சமூக பொறுப்புள்ள சந்தைப்படுத்தலில் (Socially Responsible Marketing) ஈடுபடுவீர்கள் என்பதை விளக்குக? (25 புள்ளிகள்)

Q5.

I. ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கருவிகள் (Integrated Marketing Communication Tools) மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய விளைவுகள் யாவை என்பதை விளக்குக? (05 புள்ளிகள்)

II. ஒரு தையல் கடை வைத்திருக்கும் ஒரு தொழில் உரிமையாளருக்கு ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கருவிகளை (Integrated Marketing Communication Tools) பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகின்றீர்கள், மேலும் இது தொடர்பான உங்கள் ஆலோசனையை குறிப்பிட்டு ஒரு திட்டத்தை (Proposal) முன்மொழியவும். (20 புள்ளிகள்)

-பதிப்புரிமையுடையது-